# 1.5 நல்லாட்சியும் இறைப்படைப்பும்



ஓர் சமூக அமைப்பில் உறுப்பினராக இருத்தல் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? ஓர் அமைப்பில் உறுப்பினராய் இருப்பவருக்குச் சில உரிமைகள் உள்ளன. அது போலவே உறுப்பினர் ஆற்ற வேண்டிய கடமைகளும் உள்ளன. நீங்கள் உங்கள் குடும்பத்தில் ஓர் உறுப்பினர். அது போன்றே உங்கள் திருஅவையில், அதன் இளைஞர் மன்றத்தில், பள்ளியில் மாணவர் அமைப்புக்களில் உங்களுக்கு உரிமையும், கடமையும் உள்ளன. அவரவர் தங்கள் கடமைகளை ஆற்றாமல் உரிமையை மட்டும் கோருதல் நியாயமான போக்கு அன்று. நமது கடமைகளை ஆற்றும் போதும், உரிமைகளைக் கோரும் போதும், அவை நல்வழியிலும் நேரிய முறையிலும் அமைதல் வேண்டும். சட்ட விதிகளை மதித்து நேர்மையாக வாழ வேண்டும். அதே வண்ணம் பிறரை அன்புடனும், நேர்மையுடனும் நடத்துதல் வேண்டும். ஓர் நாட்டில் ஆட்சி பொறுப்பில் இருப்போருக்கும் இது பொருந்தும்.

திருவிவிலியத்தில் நீங்கள் அறிந்துள்ளபடி, இஸ்ரயேலர் எகிப்தின் அடிமை நிலையிலிருந்து மீண்டுவந்த பொழுது கடவுள் அவர்களுக்கு நீதிச்சட்ட ஒழுங்கை வழங்கினார். இந்நீதிச்சட்டத்தின் வழியில் நடப்பதன் மூலம் மீண்டும் அடிமைத் தனத்தில் விழாமல் தற்காத்துக் கொள்ள முடியும். இஸ்ரயேலர் கடவுளின் மக்கள் என்பதற்குச் சான்றாக வாழ முடியும்.

அவர்கள் நீதிச்சட்டத்தைத் தள்ளிவிட்டு தன்னிச்சையாகச் செயல்பட்ட பொழுதெல்லாம், கடவுள் சார்பாக இறைவாக்கினர் தோன்றி இஸ்ரயேலரின் தீமைகளைச் சுட்டிக்காட்டினர். இதன் மூலம் இஸ்ரயேலர் மனந்திரும்பும் வாய்ப்பை கடவுள் வழங்கினார். இவ்விதம் தீய வழியில் நடக்க எத்தனித்த இஸ்ரயேலரை கடவுள் நல்வழிப்படுத்தியதன் நோக்கம், அவர்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதனால் ஆகும்.

தாவீது ஆட்சியில் இஸ்ரயேல் நாடு ஒற்றையாட்சியாய்ப் பிளவுபடாமல் திகழ்ந்தது. அவர் ஓரிறைக் (ஒரே கடவுள் நம்பிக்கை) கோட்பாடு கொண்டவராய் இருந்த காரணத்தால் நீதியாக நல்லாட்சி நடத்த முடிந்தது. மன்னன் தாவீதின் ஆட்சியில் ஒரு சில குறைபாடுகள் இருந்ததை மறுக்க முடியாது. அவருக்குப் பின் அவரது மகன் சாலமோன் அரியணை ஏறினார். நல்லாட்சி புரியும்படி கடவுளிடம் ஞானத்தைப் பெற்றுக் கொண்டார். ஆயினும் அவரால் மக்களுக்கு நீண்ட நாட்கள் நல்லாட்சி வழங்க முடியவில்லை.



இலவச விநியோகத்திற்காக

சாலமோன் அரசர் எருசலம் பேராலயத்தைக் கட்டினார். இருப்பினும் பல தெய்வ வணக்கத்தில் நம்பிக்கை கொண்ட வேற்றின மனைவியினரால், அஸ்தரேத்து மற்றும் கெமோசு போன்ற வேற்று தெய்வங்களை வழிபடலானார். கடவுள் அவருக்கு வழங்கிய எச்சரிக்கை மூலம் அவரை மனந்திரும்பச் செய்ய முடியவில்லை. நல்லாட்சியை விட்டு விலகி படைக்கலன் போர்முறைகளில் நாட்டம் கொண்டார். மக்கள் செய்வதறியாது தவித்தனர்.

அரசருக்கு எதிராகப் போராடியவரும் இருந்தனர். அவர்களில் தளபதி எரொபவாம் என்பவரும் ஒருவர். அவர் ஆற்றல் மற்றும் சுறுசுறுப்பு மிகுந்த இளைஞராக இருந்தார். ஒரு நாள் அகியா என்ற இறைவாக்கினர் தோன்றி, சாலமோனுக்கு பிறகு இஸ்ரயேல் நாட்டிற்கு நிகழப்போவதை அறிவித்தார்.



வாசிக்கவும்

1 அரசர் 11:31-40

எரொபவாம் மீது சாலமோன் ஐயப்பாடு (சந்தேகம்) கொண்டதனால், அவர் சாலமோனிடம் இருந்து தப்பியோடி அரசர் மரணமடையும் வரையில் எகிப்தில் மறைந்து வாழ்ந்தார்.

சாலமோனின் பின்பு அவரது மகன் ரெகபெயாம் அரியணையேற்றார். இஸ்ரயேலின் தலைவர்கள் அவரை அரசராக்க ஒன்று திரண்டனர். எகிப்தில் மறைந்து வாழ்ந்த எரொபவாம் அவர்கள் நடுவில் இருந்தார். ரெகபெயாம் அரியணை பொறுப்பேற்பதற்கு முன்பு எரொபவாம் ஓர் விண்ணப்பத்தை முன் வைத்தார்.



வாசிக்கவும்

1 அரசர் 12:4

**சிந்தியுங்கள்**

எரொபவாம் மற்றும் அவரோடு வந்த மக்கள் முன் வைத்த விண்ணப்பம் மற்றும் அவர்கள் தந்த வாக்குறுதி என்ன? மக்கள் ஆட்சியாளருடன் கலந்துரையாடுவது நல்ல பலன் தருமா?

அரசாட்சி எப்படி அமைய வேண்டும் என்பதற்கு இப்பகுதி வழங்கும் செய்தி என்ன?



*இலவச விநியோகத்திற்காக*

ஓர் அரசனின் கடமை மக்களை நல்லாட்சி மூலம் பாதுகாப்பதாகும். மக்கள் மீது ரெகபெயாம் அரசன் சுமத்திய வரிச் சுமை மற்றும் வாழ்க்கைப் பளுவைத் தாங்க முடியாத மக்கள் முறைப்பாடு செய்ய ஆரம்பித்தார்கள். அரசாட்சியை நேரிய வழியில் நடத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்க அவர்கள் முன் வந்தனர். கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப மக்களை வழி நடத்துவதன் மூலம் இறைப்படைப்புகளுக்கு பங்களிப்புச் செய்யலாம். எனவே மக்களின் மூப்பர், அரசனிடம் நீதியான ஆட்சியைக் கோரினர். அதற்கு அரசர் ரெகபெயாம், ''நீங்கள் சென்று மூன்று நாட்களில் திரும்பி வாருங்கள்'' என்று கூறி அனுப்பினார். அதன் பிறகு அரசன் ரெகபெயாம் அரசவையில் பணியாற்றிய முதியவரிடம், இவர்களுக்கு என்ன மறுமொழி கூறலாம்? உங்கள் கருத்தென்ன என்று ஆலோசனை கேட்டார். அவர்கள் அரசனிடம், இம்மக்களுக்கு இனிய சொற்களில் பதிலளித்தால் அவர்கள் எந்நாளும் உமக்குப் பணியாளர்களாய் இருப்பார்கள் என்றார்கள். ஆனால் அரசர் முதியோர் தனக்கு அளித்த அறிவுரையைத் தள்ளிவிட்டு, தன்னோடிருந்த இளைஞரோடு ஆலோசித்தார்.

மூன்று நாட்களுக்குப் பிறகு தன்னிடம் வந்த மக்களிடம், 'என் தந்தை உங்களை நடத்தியதை விட நான் உங்களைக் கடினமாக நடத்துவேன்' என பதிலுரைத்தார். இதைக் கேட்ட மக்கள் மிகவும் மனமுடைந்த நிலையில், ''இனி உமது ஆட்சியின் கீழ் இணைந்து வாழ்வதில் பயனில்லை'' என்று கூறி திரும்பிச் சென்றனர்.

இஸ்ரயேல் நாடு இரண்டாகப் பிரிந்து சென்றதற்கு இதுவே முதன்மையான காரணமாய் அமைந்தது. அது முதல் இஸ்ரயேல் வடநாடு, தென்நாடு என இரு நாடுகளாகப் பிரிந்தது. வடநாடு இஸ்ரயேல் என்றும், தென் நாடு யூதா என்றும் பெயர் பெற்றன. வட நாட்டின் தலை நகரம் சமாரியா. அங்கு பத்து கோத்திரங்கள் (குலம்) ஒன்று கூடி எரொபவாமை தமக்கு அரசனாக ஏற்படுத்தினார்கள். இரண்டு கோத்திரங்கள் இணைந்த தென் நாடு ரெகபெயாம் தலைமையில் ஒரு அரசாக உருவாகியது. அதன் தலைநகரம் எருசலேம் ஆகும். ஓர் அரசன் நீதியாக ஆட்சி புரியாவிட்டால் நாட்டு குடிமக்கள் பிரிந்து செயல்படத் தொடங்குவர் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். இது போன்ற வேளைகளில் கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவ முடியும்?

ரெகபெயாம் நீதியான ஆட்சி நடத்துவதற்கு தனக்கு கிட்டிய ஒரு நல்ல வாய்ப்பைத் தவற விட்டதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?



*இலவச விநியோகத்திற்காக*

## படைப்பின் வளர்ச்சியில் பவுலின் செய்தி

பவுலடிகளார் கொரிந்து திருஅவைக்கு எழுதிய திருமடலை நோக்குவோம். கொரிந்து திரு அவையில் மக்களிடையே ஏற்பட்ட சிக்கல்களை நீக்க பவுல் முன்வைத்த தீர்வுகளைப் பார்ப்போம். நமது படைப்பாளராகிய கடவுளுக்கும் அவரால் படைக்கப்பட்ட படைப்புகளுக்கும் இடையிலான வேறுபாட்டை உணர்ந்து அறிய வேண்டுமென உணர்த்துகிறார்.

1 கொரிந்தியர் 12:4-11 உள்ள பகுதியின்படி தூய ஆவியார் எவ்விதம் செயல்படுகிறார் என வாசித்து அறியவும். இப்பகுதியின் கூற்றுப்படி இவ்வுலகில் இறையரசு எவ்விதம் வளர்ச்சியடைகிறது என்பதைப் புரிந்து கொள்ள முனையவும். பிறருடைய நன்மை கருதி எவ்விதம் ஒற்றுமையாகச் செயல்படலாம் என சிந்திக்கவும்.

'அருள் கொடைகள் பலவகையுண்டு. ஆயினும் அவற்றை வழங்குபவர் தூய ஆவியாரே'. எனவே, ஒரே ஆவியாரிடமிருந்து கொடைகளைப் பெற்றவர்கள் ஒருவரையொருவர் முந்திக் கொள்ளப் போட்டியிடும் நிலைமையைத் தவிர்த்தல் வேண்டும். உடலின் ஓர் உறுப்பு இன்னுமொரு உறுப்பிற்கு உதவுவதன் மூலம் உடலின் செயல்பாட்டிற்கு துணை புரிவதைப் போன்று, கொடைகளைப் பெற்றவர்களும் ஒருவரோடொருவர் இணைந்து செயல்படுவதுடன், ஏனைய படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவுதல் வேண்டும் என்னும் கருத்தைப் பவுல் அடிகளார் முன்வைக்கிறார்.

எனவே இறையரசின் குடிமக்கள் என்ற வகையில் செயல்பட நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கடவுளே அனைத்து ஆற்றலும் உள்ளவர் என்பதை உணர்ந்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, அனைத்துப் படைப்புகளின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ய வேண்டிய நமது கடப்பாட்டை உணருவோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக இணைக்கப்பட்டுள்ள நாம், ஒருவரின் வளர்ச்சிக்கு இன்னுமொருவர் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதை உணர வேண்டும். இப்பணி இலகுவான பணியல்ல என்பதால் தூய ஆவியாரின் வழி நடத்துதலை நாம் பெற வேண்டும்.

## செயல்பாடு

1. *நீதியான ஆட்சியை ஏற்படுத்த ஓர் ஆட்சியாளருக்கு இருக்க வேண்டிய 5 தன்மைகளை எழுதவும்.*

2. *தலைவர்களை நீதியான ஆட்சியை நோக்கி உந்தித் தள்ளுவதற்கு மக்கள் ஆற்ற வேண்டிய பணி என்ன?*

3. *ஞானத்தைத் தவறான வழியில் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் விளைவுகள் என்ன?*

4. *1 கொரிந்தியர் 12:7-10 பகுதியில் காணப்படும் தூய ஆவியாரின் கொடைகளை நிரல்படுத்தவும்.*

5. *“நீதியான ஆட்சிக்கு சட்டவிதிகள் தேவை”. இப்பொருளில் ஓர் விவாதம் நடத்தவும்.*



*இலவச விநியோகத்திற்காக*